<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 17/2022 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | கிருஷ்ணன் | நாள் | 29.02.2024 |
| தகப்பனார் பெயர் | வேட்ராயன் | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:–</u>

1) நான் கல்லுடைக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால், சரிதான். நான் எந்த ஊரில் கல்லுடைக்க செல்வேன் என்றால், ஆந்திராவிலுள்ள குண்டுர் மற்றும் பேரிச்செல்லாவில் கல்லுடைக்க செல்வேன். நான் மேற்படி கல்லுடைக்கும் பணியை ஒரு மேஸ்திரியின் கீழ்தான் செய்து வருகிறேன் என்றால், சரிதான். அதே போல், 2 முதல் 4 வரையிலான வாதிகளும் கல்லுடைக்கும் தொழில்தான் செய்து வருகிறார்கள் என்றால், சரிதான். மேற்படி வாதிகளின் தாயாரான 1ம் வாதி பெருமாயியும், மேற்படி வாதிகள் எங்கெல்லாம் கல்லுடைக்க செல்கிறார்களோ அங்கு சென்று அவர்களுடனே தங்கிவிடுவார் என்றால், சரிதான்.

2) பிரதிவாதிகளும் கல்லுடைக்கும் தொழில் தான் செய்து வருகின்றனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. 1ம் வாதிக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் இடையேயுள்ள பிரச்சனை குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியும். நான் 1ம் வாதிக்கும், பிரதிவாதிகளுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட கிரய பத்திரத்தில் நான் ஏதேனும் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி கிரய ஆவணம் எங்கு பதிவு செய்யப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி கிரய பத்திரத்திரம் பதியப்பட்ட சமயத்தில், என்ன சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. சாட்சி பின்னிட்டு, மேற்படி சர்வே எண்களை தான் பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறார்.

3) வாதிகள் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என எனக்கு தெரியுமா என்றால், தெரியும். தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் எந்த வில்லங்கமும் செய்யக்கூடாது என கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். தாவா

சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால், பெருமாயி பெயரில் உள்ளது. அது தனிப்பட்டாவா என்றால், இல்லை. மேற்படி பட்டா யார் யார் பெயரில் உள்ளது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

4) தாவா சொத்திற்குரிய வீட்டு வரி இரசீது, மின் கட்டண இரசீது ஆகியவை யார் பெயரில் உள்ளது என எனக்கு தெரியுமா என்றால், பெருமாயி பெயரில் உள்ளது. பெருமாயி பெயரில் உள்ளதை நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நிலத்தை அளக்க பணம் கட்டியதாக நான் சொல்லியுள்ள நிலையில், எந்த தேதியில் அவ்வாறு பணம் கட்டினார்கள் என்பது குறித்து, எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியாது.

5) எந்த தேதியில் வாதிகள், பிரதிவாதிகள் மீது நங்கவள்ளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர் என எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியாது. அதற்கு பின்னிட்டு வருவாய் துறையினர் தாவா சொத்தை அளந்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் எந்த தேதியில் அளந்தனர் என எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியாது. பிரதிவாதிகள் சொத்தை அளப்பதை தடுத்ததாக நான் சொல்லியுள்ள நிலையில், அது தொடர்பாக சர்வேயர் காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் அளித்தாரா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

6) இவ்வழக்கில் எனக்கு முன்பாக யார் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. 1ம் வாதி பெருமாயி கிரயம் பெற்ற சொத்திற்கான நான்குபுற சக்குபந்தி விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தை ஆதியில் யார் அனுபவித்து வந்தனர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

7) தாவா சொத்தில் பிரதிவாதிகள்தான் சுவாதீனத்தில் உள்ள நிலையில், வாதிகள் ஒருபோதும், தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லாத நிலையில், தாவா சொத்து குறித்தும், வாதிகள், பிரதிவாதிகளுக்கிடையே உள்ள பிரச்சனை குறித்தும், எனக்கு

நேரடியாக தெரியாமல், வாதிகளுடன் நான் வேலை செய்து வருவதால், வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் உண்மையைத்தான் சொல்கிறேன்.

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.